# எங்கள் தமிழ்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. உலக மொழிகளில் தொன்மையானது ________ மொழி

அ) தமிழ் ஆ) தெலுங்கு இ) கன்னடம் ஈ) இந்தி

2. ________ தேவையான அன்பையும் அறத்தையும் கூறுவது தமிழ்மொழி

அ) புகழுக்கு ஆ) பாடலுக்கு இ) வாழ்வுக்கு ஈ) விளையாட்டுக்கு

3. தமிழ்மொழி அச்சத்தைப் போக்கி ________ தரும்

அ) பயம் ஆ) துன்பம் இ) இன்பம் ஈ) புகழ்

4. எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ ________ உதவும்.

அ) காசு பணம் ஆ) அன்பும் அறமும்

இ) துன்பம் துயரம் ஈ) மண் பொன்

5. நாமக்கல் கவிஞரின் இயற்பெயர் ________

அ) சுப்பிரமணி ஆ) மணிகண்டன் இ) சிதம்பரம் ஈ) இராமலிங்கனார்

6. காந்தியக்கவிஞர் என்று அழைக்கப்படுபவர் ________ கவிஞர்

அ) மதுரை ஆ) திருச்சி இ) நாமக்கல் ஈ) நெல்லை

7. தமிழகத்தில் முதல் அரசவைக் கவிஞராக விளங்கியவர் ________

அ) கலைஞர் ஆ) நாமக்கல் கவிஞர்

இ) அண்ணா ஈ) எம். ஜி. ஆர்

8. 'அன்பறமே' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

அ) அ + பறமே ஆ) அன் + பறமே இ) அன்பு + உறமே ஈ) அன்பு + அறமே

9. 'தமிழெனும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

அ) தமி + ழெனும் ஆ) தமிழ் + எழும் இ) தமிழ் + எனும் ஈ) தமிழ் + ஏனும்

10. 'சங்கொலி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

அ) சங்கு + ஒலி ஆ) சங்கு + எலி இ) ச + ஒலி ஈ) சங் + கொலி

# ஒன்றல்ல இரண்டல்ல

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ________ மொழி இலக்கிய வளமும் இலக்கண வளமும் நிறைந்தது.

அ) குஜராத்தி ஆ) மராட்டியம் இ) தமிழ் ஈ) துளு

2. 'உபகாரி' என்பதன் பொருள் ________யில் சிறந்தவர்கள்.

அ) உப்புக்காரி ஆ) உப்பு விற்பவர் இ) வள்ளல் ஈ) புலவர்

3. தமிழக மன்னர்களும் வள்ளல்களும் ________

அ) பொருள் ஆ) கொடை இ) வீரம் ஈ) நட்பு

4. பகுத்தறிவுக் கவிராயர் என்று புகழப்படுபவர் ________

அ) பாரதிதாசன் ஆ) பெரியார்

இ) பாரதியார் ஈ) உடுமலை நாராயணகவி

5. உடுமலை நாராயணகவி __________ இசையின் எளிமையைக் கையாண்டு கவிதைகள் எழுதினார்.

அ) நாட்டுப்புற ஆ) கர்நாடக

இ) மேலைநாடு ஈ) மலையாள

6. வீசும் தென்றலில் __________ மணம் கமழும்.

அ) பூ ஆ) மண் இ) புலால் ஈ) தேன்

7. தமிழ்நாட்டின் __________ நிலவளம் ஒன்றிரண்டல்ல பலவாகும்.

அ) புன்செய் ஆ) நன்செய்

இ) தஞ்சை ஈ) செம்மண்

8. __________ போன்ற தானியக் கதிர்கள் விளையும்.

அ) வைரம் ஆ) முத்து

இ) பொன் ஈ) மாணிக்கம்

9. இசைப்பாடல் நூல் __________

அ) திருக்குறள் ஆ) தொல்காப்பியம் இ) நன்னூல் ஈ) பரிபாடல்

10. வான் புகழ் கொண்ட நூல் __________

அ) புறநானூறு ஆ) அகநானூறு

இ) பரிபாடல் ஈ) திருக்குறள்

11. அகம், புறம் ஆகியவற்றை மெய்ப்பொருளாகக் கொண்டு பாடப்பட்ட இலக்கியம் __________

அ) சங்க இலக்கியம் ஆ) பக்தி இலக்கியம்

இ) அற இலக்கியம் ஈ) குழந்தை இலக்கியம்

12. முல்லைக்கு தேர் தந்த வள்ளல் __________

அ) பேகன் ஆ) பாரி இ) ஓரி ஈ) காரி

13. புலவரின் சொல்லுக்காகத் தன் தலையையே தரத் துணிந்த வள்ளல் __________

அ) பாரி ஆ) அதியமான் இ) குமணன் ஈ) நள்ளி

14. 'ஒன்றிரண்டல்ல' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________

அ) ஒன்றல்ல + இரண்டல்ல ஆ) ஒன்று + அல்ல

இ) ஒன்று + இரண்டு + அல்ல ஈ) இரண்டு + அல்ல

15. 'எட்டுத்தொகை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________

அ) எட்டுத் + தொகை ஆ) எட்டு + தொகை

இ) ஏடு + தொகை ஈ) எட்டிய + தொகை

16. நன்மை + செய் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் __________

அ) நன்மைசெய் ஆ) நன்செய்

இ) நண்செய் ஈ) நன்மையில்செய்

17. பாடல் + ஆசிரியர் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் __________

அ) பாடலாசிரியர் ஆ) பாட்டாசிரியர் இ) பாடல் ஆசிரியர் ஈ) பாட்டு ஆசிரியர்

18. பகுத்து + அறிவு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் __________

அ) பகுத்திறிவு ஆ) பகுத்து அறிவு இ) பகுத்தறிவு ஈ) பகுத்துறிவு

## பேச்சு மொழியும், எழுத்து மொழியும்

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. __________ மொழி பழமையும் புதுமையும் நிறைந்த சிறந்த மொழி.

அ) தெலுங்கு ஆ) கன்னடம் இ) தமிழ் ஈ) இந்தி

2. தமிழ்மொழி __________ கூறுகளைக் கொண்டது.

அ) மூன்று ஆ) இரண்டு இ) நான்கு ஈ) ஐந்து

3. தனது எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் பிறருக்கு வெளிப்படுத்துவதற்காக மனிதனால் உருவாக்கப்பட்டதே __________ ஆகும்.

அ) மொழி ஆ) கருவி இ) உலகம் ஈ) அறிவு

4. சொல்லை ஒலிப்பதில் ஏற்படும் ஏற்ற இறக்கத்தால் __________ வேறுபடும்.

அ) சொல் ஆ) பொருள் இ) சிந்தனை ஈ) அறிவு

5. மொழியின் உயிர்நாடியாக விளங்குவது __________ மொழியே என்பர்.

அ) எழுத்து ஆ) பொருள் இ) அர்த்தம் ஈ) பேச்சு

6. __________ மொழி இடத்திற்கு இடம் மாறுபடும்.

அ) எழுத்து ஆ) பேச்சு இ) செய்தி ஈ) கணினி

7. __________ மொழியை இலக்கிய வழக்கு என்றும் கூறுவர்.

அ) பேச்சு ஆ) எழுத்து இ) தெலுங்கு ஈ) கன்னடம்

## குற்றியலுகரம், குற்றியலிகரம்

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. குறுகிய ஓசையில் ஒலிக்கும் உகரம்__________

அ) குற்றியலிகரம் ஆ) குற்றியலுகரம்

இ) முற்றியலுகரம் ஈ) உயிர்மெய்

2. குறுகிய ஓசையில் ஒலிக்கும் இகரம் __________

அ) குற்றியலுகரம் ஆ) முற்றியலுகரம்

இ) குற்றியலிகரம் ஈ) ஆய்தம்

3. தமிழ் எழுத்துகளை __________ வகையாகப் பிரிப்பர்.

அ) மூன்று ஆ) நான்கு இ) ஐந்து ஈ) இரண்டு

4. உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு ஆகிய முப்பது எழுத்துகளும் __________ எழுத்துகள் எனப்படும்.

அ) முதல் ஆ) சார்பு இ) உயிர்மெய் ஈ) கடை

5. சார்பெழுத்து __________ வகைப்படும்.

அ) 5 ஆ) 6 இ) 10 ஈ) 12

6. சார்பெழுத்துகளில் ஒன்று __________.

அ) உயிரெழுத்து ஆ) குற்றியலுகரம்

இ) மெய்யெழுத்து ஈ) இனவெழுத்து

7. குற்றியலுகரத்திற்கான மாத்திரை __________.

அ) ஒன்று ஆ) இரண்டு இ) அரை ஈ) கால்

8. குற்றியலிகரத்திற்கான மாத்திரை __________.

அ) அரை ஆ) ஒன்று இ) கால் ஈ) இரண்டு

9. குற்றியலுகரம் __________ வகைப்படும்.

அ) ஐந்து ஆ) ஆறு இ) ஏழு ஈ) எட்டு

10. குற்றியலிகரம் __________ இடங்களில் மட்டும் வரும்.

அ) இரண்டு ஆ) ஐந்து இ) எட்டு ஈ) ஆறு